# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத் திருத்த (எஃப்சிஆர்ஏ) மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்ப மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
   i. இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பதோடு, மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என காங்கிரஸ் மற்றும் திரிணமூல் காங்கிரஸ் கோரிக்கைவைத்து வரும் நிலையில் மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு அனுப்ப மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.
   ii. கடந்த மார்ச் 25-ஆம் தேதி மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட் எஃப்சிஆர்ஏ மசோதா அரசு அல்லாத அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு நிதிக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கும் அம்சங்களைக் கொண்டுள்ளது.
   iii. இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகையில், 'சிறுபான்மையினர் நிதி உதவி பெறுவதற்கு எதிராக எஃப்சிஆர்ஏ மசோதா இருப்பதாக காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக ஆகியவை அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து, எஃப்சிஆர்ஏ மசோதாவை கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்புவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கான தீர்மானம் மக்களவையில் புதன்கிழமை (ஆக.12) முன்மொழியப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது' எனத் தெரிவித்தன.

2. லெபனானில் மரண தண்டனை அதிகாரபூர்வமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.
   i. இதையொட்டி லெபனான் நாடாளுமன்றத்தில் தீர்மானம் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில், மொத்தமுள்ள 128 உறுப்பினர்களில் ஹிஸ்புல்லா உறுப்பினர்களைத் தவிர பெரும் பான்மையானவர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
   ii. இதன்மூலம், அரபு நாடுகளில் மரண தண்டனையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகக் கடுங்காவலுடன் கூடிய ஆயுள் தண்டனையைச் சட்டமாக்கிய முதல் நாடு என்ற வரலாற்றுச் சிறப்பை லெபனான் பெற்றுள்ளது. கடந்த 2004 முதலே லெபனானில் மரண தண்டனை நிறைவேற்றுவது

அதிகாரபூர்வமற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

3. இந்தோனேசியாவின் ஜாவா தீவில் அமைந்துள்ள புகழ்பெற்ற புரோமோ தெங்கர் செமேரு தேசியப் பூங்காவில் கடந்த வாரம் பரவிய காட்டுத்தீ தற்போது பெருமளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
   i. எனினும், சில பகுதிகளில் தொடர்ந்து எரிந்து வரும் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, சுமார் 900 ஹெக்டேர் (2,224 ஏக் கர்) பரப்பளவிலான நிலப்பரப்பு இக்காட்டுத் தீயில் கருகி நாசமாகியுள்ளன.
   ii. வறட்சிக் காலமான தற்போது இந்தோனேசியா முழுவதும் காட்டுத்தீப் பரவல் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

4. காங்கோ குடியரசில் அதிவேகமாக பரவி வரும் எபோலா நோய்த் தொற்றுக்கு இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2,000-ஐ கடந்துள்ளது.
   i. அந்நாட்டு அரசு வெளியிட்ட தரவுகளின்படி, மொத்தம் 4,381 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 2,011 பேர் உயிரிழந்தனர்.
   ii. கடந்த மே 15-இல் அறிவிக்கப்பட்ட இந்த நோய்த் தொற்றில் பரவும் 'புண்டிபுக்யோ' வகை எபோலா தீநுண்மிக்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் ஏதுமில்லை என்பதால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகக் குறுகிய காலத்தில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
   iii. மேலும், கிளர்ச்சியாளர்களின் மோதல், ஊதியப் பிரச்னையால் சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொண்டுள்ள பணிநிறுத்தம் ஆகிய காரணங்களால், தொலைதூரப் பகுதிகளுக்கு மருத்துவ உதவிகள் சென்றடைவதில் கடும் சிக்கல் நிலவுகிறது.

5. சிரியாவில் 14 ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக, அந்நாட்டின் முன்னாள் அதிபர் பஷார் அல் அசாத் மற்றும் அவரின் சகோதரருக்கு மரண தண்டனை விதித்து, நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.
   i. சிரியாவில் கடந்த 2024 டிசம்பரில், பஷார் அல் அசாத்தின் ஆட்சி

கிளர்ச்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டது. இதன்மூலம், சுமார் 50 ஆண்டுகால அசாத் குடும்பத்தினரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதையடுத்து, பஷார் அல் அசாத் தற்போது நாட்டைவிட்டு வெளியேறி, ரஷியாவில் தஞ்சமடைந்துள்ள நிலையில்; அவர் நேரில் ஆஜராகாமலேயே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ii. பஷார் அல் அசாத்துடன் சேர்த்து, அவரின் சகோதரர் மகேர் அசாத், உறவினரும் முன்னாள் பாதுகாப்பு அதிகாரியுமான அதெஃப் நஜிப் ஆகியோருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பலத்த பாதுகாப்புக்கு இடையே நீதிமன்ற கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த நஜிப் முன்னிலையில் இத்தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

iii. கடந்த 2011-இல் டாரா மாகாணத்தில் உள்ள பள்ளிச் சுவரில் அரசுக்கு எதிராக வாசகங்கள் எழுதிய மாணவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்த விவகாரமே, பஷார் அல் அசாத் அரசுக்கு எதிரான மாபெரும் கிளர்ச்சியாக வெடித்தது.

iv. தொடர்ந்து ராணுவத் தளபதியாக இருந்த அசாத்தின் சகோதரர் மகேர் அசாத், பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான அதெஃப் நஜிப் ஆகியோர் மேற்கொண்ட கடும் ஒடுக்குமுறைகள் 14 ஆண்டுகால உள்நாட்டுப் போராக மாறியது. இப்போரில் சுமார் 5 லட்சம் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

6. ரூ.10 மற்றும் ரூ.20 நோட்டுகளை பாலிமரில் (பாலிபுரோப்பலீன் நெகிழி) அச்சிட்டு வெளியிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மொத்தம் 100 கோடி என்ற எண்ணிக்கையில் பாலிமர் ரூபாய் நோட்டுகள் வெளியிடப்படவுள்ளன.

i. இதன்மூலம் ரூபாய் நோட்டுகள் கிழிதல், அழுக்கடைதல், நனைந்து சேதமடைதல் உள்ளிட்ட பிரச்னைகளைத் தடுக்க முடியும். இதனால், புதிய நோட்டுகளை அச்சடிக்கும் பணி, நேரம்மிச்சமாகும். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்த நோட்டுகள் புழக்கத்துக்கு வரும் என்று தெரிகிறது.

ii. இந்திய ரிசர்வ் வங்கி அளித்த பரிந்துரையின் அடிப்படையில் பாலிமர் ரூபாய் நோட்டுகளை வெளியிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

7. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 12-ஆம் தேதி உலக யானை தினமாக

கடைப்பிடிக்கப்படுகிறது.

8. நிலவின் தென் துருவத்துக்கு அருகே மனிதர்களுக்கான முதல் வசிப்பிடத்தை அமைக்கும் தனது லட்சியத் திட்டத்தில் இணைய இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' அழைப்பு விடுத்துள்ளது.

i. 'நிலவு ஆராய்ச்சித் தள திட்டம் (மூன் பேஸ் மிஷன்)' என்ற பெயரிலான இந்தத் திட்டத்தின் கீழ், விண்வெளி வீரர்கள் நீண்ட காலம் தங்கி ஆய்வுகள் மற்றும் பிற பணிகளை மேற்கொள்ள வசதியாக நிலவின் தென் துருவத்துக்கு அருகே நிரந்தர வசிப்பிடத்தை அமைக்க நாசா திட்டமிட்டுள்ளது. புதிய விண்வெளிக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதும், எதிர்கால தீவிர விண்வெளி ஆய்வுகளுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதும் இதன் நோக்கமாகும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

ii. இந்த நிலையில், பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற இந்தியா அமெரிக்கா கூட்டு விண்வெளி ஆய்வுப் பணிக் குழு (சிஎஸ்ஜேடபிள் யுஜி) கூட்டத்தில், இரு நாடுகளிடையேயான விண்வெளி ஆராய்ச்சி ஒத்துழைப்பை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டது. அப்போது, தனது நிலவ ஆராய்ச்சித் தள திட்டத்தில் இணைய இஸ்ரோவுக்கு நாசா அழைப்பு விடுத்தது. இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

- அமைதியான முறையில் விண்வெளி ஆய்வை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையின் கீழ் இரு நாடுகள் கூட்டுறவுடன் நிலவு ஆராய்ச்சித் தள திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோவுக்கு நாசா சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.
- இந்த உடன்படிக்கையின் கீழ், வெளிப்படையான விஞ்ஞான தரவுப் பகிர்வு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தையை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லவும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.
- பாதுகாப்புத் துறையில் வளர்ந்து வரும் முக்கியத் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், குவாண்டம், உயிரி தொழில் நுட்பம், எரிசக்தி, விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த கடந்த ஆண்டு பிப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட 'வியூக தொழில்நுட்பத்தைப்

பயன்படுத்தி அமெரிக்கா - இந்தியா இடையேயான உறவை மேம்படுத்துதல் (டிரஸ்ட்)' உடன்படிக்கையின் கீழ், இரு நாடுகளிடையே விண்வெளி ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

9. நாடு முழுவதும் உள்ள பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் நியமன நடைமுறைகளுக்காக தேசிய தீர்ப்பாய ஆணையம் (என் டிசி) அமைக்க வழிவகுக்கும் தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா-2026, மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

i. இந்த மசோதா மக்களவையில் கடந்த திங்கள்கிழமை நிறைவேறிய நிலையில், நாடாளுமன்ற இருஅவைகளின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

ii. மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக் வால் பேசியபோது, 'நாட்டில் நவீனமான, சுதந்திரமான, ஒரேசீரான தீர்ப்பாய நடைமுறையை உறுதி செய்வதே மசோதாவின் நோக்கமாகும். அதன்படி, தேசிய தீர்ப்பாய ஆணையம் அமைப்பதை மையக்கருவாக கொண்டுள்ளது 'என்றார். இதைத் தொடர்ந்து, குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

10. தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்க வகை செய்யும் மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்தார்.

i. ‘தேசிய கௌரவம் மீதான அவமதிப்புகள் தடுப்புச் சட்ட திருத்த மசோதா-2026' என்ற பெயரிலான இந்த மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஜூலை 29-ஆம் தேதியும், மக்களவையில் ஜூலை 30-ஆம் தேதியும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது, குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, இந்த மசோதா சட்டமாக மாறியுள்ளது. அரசிதழில் அறிவிக்கை செய்தவுடன், இந்த சட்டம் அமலுக்கு வரும்.

ii. தேசிய கீதமான ஜன கண மன பாடலுக்கான அதே சட்டப் பாதுகாப்பை தேசியப் பாடலான வந்தே மாதரத்துக்கும் வழங்குவதுடன், அந்தப் பாடலுக்கு இழைக்கப்படும் எந்தவொரு அவமதிப்புக்கும் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது.

iii. வரும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி தில்லி செங்கோட்டையில் கொண்டாடப்படும் சுதந்திரதின விழாவில், முதல் முறையாக வந்தே மாதரம் பாடல் பாடப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அண்மையில் தெரிவித்தது.

iv. முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜனவரி 28– ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில், 'வந்தே மாதரம்' தேசிய பாடலை பாடுவதற்கான முதல்கட்ட நெறிமுறைகளை வழங்கியது. குடியரசுத் தலைவர் வருகை, தேசியக் கொடியேற்றம், மாநில ஆளுநர்களின் உரைகள் போன்ற அரசு நிகழ்வுகளில், 3 நிமிஷங்கள் 10 விநாடிகள் நீளமுள்ள தேசியப் பாடலின் ஆறு சரணங்களும் முழுமையாகப் பாடப்பட வேண்டும். தேசியப் பாடலும் தேசிய கீதமும் பாடப்படும்போது, தேசியப் பாடல் முதலில் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிட்டது.

11. 2025-26 நிதியாண்டில் 3.92 டிரில்லியின் டாலர் பொருளாதாரத்துடன் உலகின் 6-ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்ந்ததாக நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் செளதரி தெரிவித்தார்.

i. சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) 2026, ஏப்ரலில் வெளியிட்ட உலக பொருளாதார அறிக்கையை கண்ணோட்ட சுட்டிக்காட்டி அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ii. இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த எழுத்துபூர்வ பதிலில், 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.3.92 டிரில்லியன் டாலர் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (ஜிடிபி) உலகின் 6-ஆவது பெரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்ந்தது.

iii. அமெரிக்கா டாலர் மாற்று விகிதங்களின் அடிப்படையில் இந்த தரவரிசைப் பட்டியலை ஐஎம்எஃப் வெளியிட்டுள்ளது.

iv. பொருளாதார வளர்ச்சி, அந்நிய செலாவணி மாற்று விகிதம் மற்றும் விலைகளில் ஏற்படும் மாற்றும், தேசிய கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் மற்றும் பிற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி காரணமாக இதில் மாற்றங்கள் நிகழலாம்.

v. இருப்பினும், இந்திய பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த விரிவான வியூகக் கொள்கைகளை இந்தியா செயல்படுத்தி வருகிறது.

vi. வேளாண் உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகைத் திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்துதல் உள்ளிட்ட உற்பத்தித் துறையை ஊக்குவிக்கும் முன்னெடுப்புகள்,

எளிமையான அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கை, நேரடி வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) சீர்திருத்தங்கள் என பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது' என குறிப்பிட்டார்.

12. மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தான், சவுதி அரேபியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு இடையே சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம்.

(i) முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம்

- சவுதி அரேபியாவின் மெக்காவில் உள்ள அல்-சஃபா அரண்மனையில் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.
- பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் துருக்கிய அதிபர் ரெசெப் தையிப் எர்டோகன் ஆகியோரின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, இந்த மூன்று நாடுகளில் ஏதேனும் ஒன்றின் மீதான தாக்குதல், மூன்று நாடுகளின் மீதான தாக்குதலாகவே கருதப்படும்; இதனால் கூட்டு நடவடிக்கை தேவைப்படும்.
- ஆக்கிரமிப்புக்கு எதிரான கூட்டுப் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துதல், பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுதல் ஆகியவை இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும்.

(ii) பின்னணி மற்றும் தூண்டும் காரணிகள்

- செப்டம்பர் 17, 2025 அன்று சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் இடையே கையெழுத்தான இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- செப்டம்பர் 9, 2025 அன்று கத்தாரின் தோஹாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து, நீண்டகால அமெரிக்கப் பாதுகாப்பின் மீதான நம்பிக்கையை வளைகுடா நாடுகள் இழக்கத் தொடங்கின.
- பிப்ரவரி 2026 முதல் அமெரிக்கா-ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்ததும் (இதன் போது வளைகுடா மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது), இந்த ஒப்பந்தத்திற்கான முக்கிய உந்து

சக்தியாக அடையாளம் காணப்படுகிறது.

(iii) நேட்டோ (NATO) மற்றும் முந்தைய கூட்டணிகளுடன் ஒப்பீடு

- ஒருங்கிணைந்த இராணுவத் தலைமை, நிரந்தர கூட்டுப் படைகள் மற்றும் பல தசாப்தங்களாக உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்ட நேட்டோ அமைப்பைப் போலன்றி, இந்த புதிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் தற்போது அத்தகைய ஒருங்கிணைந்த செயல்பாட்டு அமைப்புகள் இல்லை.
- ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்கள் இருந்தபோதிலும், ஈரான் அல்லது ஏமனில் உள்ள ஹூதி கிளர்ச்சியாளர்கள் சவுதி அரேபியாவைத் தாக்கியபோது, அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட பாகிஸ்தான் முன்பு மறுத்துவிட்டது; ஏனெனில் அது ஈரானுடன் நேரடி மோதலைத் தவிர்க்க விரும்புகிறது.
- 2000-ஆம் ஆண்டில் வளைகுடா அரபு நாடுகளுக்காக இதேபோன்ற கூட்டுப் பாதுகாப்பு கவுன்சில் ஒன்று நிறுவப்பட்டது; ஆனால் 26 ஆண்டுகால செயல்பாட்டில், அதன் விதிகளின் கீழ் எந்தவொரு நாடும் மூன்றாம் தரப்புக்கு எதிராக இராணுவத் தலையீட்டில் ஈடுபடவில்லை.

(iv) மூலோபாய நலன்கள் மற்றும் பிராந்திய அதிகாரச் சமநிலை

- சவுதி அரேபியா பொருளாதார ரீதியாக வலிமையானதாக இருந்தாலும், துருக்கி (ட்ரோன் மற்றும் இராணுவ உற்பத்தி தொழில்நுட்பத்திற்கு பெயர் பெற்றது) மற்றும் பாகிஸ்தான் (அணு ஆயுதங்கள் மற்றும் பெரிய அளவிலான இராணுவப் படைக்கு பெயர் பெற்றது) ஆகியவற்றுடன் கூட்டு சேர்வதன் மூலம் தனது பாதுகாப்பை வலுப்படுத்த விரும்புகிறது.
- "ஆபரேஷன் சிந்தூர்" (Operation Sindoor) நடவடிக்கையின் போது இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் துருக்கியின் உதவியை நாடியிருந்தாலும், இந்தியா அந்த முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்தது.
- சவூதி அரேபியாவுடனான இந்தியாவின் உறவு பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் உணர்வுப்பூர்வமான அளவிலும் வலுவாக உள்ளது; எனவே, இந்த ஒப்பந்தம் இயல்பாகவே இந்தியாவுக்கு எதிரானதாக இருக்காது என்று கருதப்படுகிறது.

(v) புவிசார் அரசியல் தாக்கங்கள்

- இப்பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவின் பாரம்பரிய நட்பு

நாடுகளிடையே அமெரிக்கா மீதான நம்பிக்கை குறைந்து வருவதற்கான தெளிவான அறிகுறியாகவே இந்த ஒப்பந்தம் விவரிக்கப்படுகிறது.

- இந்த ஒப்பந்தம் குறித்து இந்தியா அலட்சியமான போக்கையே கொண்டிருக்கும்; ஈரான் இதனால் அச்சுறுத்தப்படாது; அதேவேளையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும் இதைப் பற்றிக் கவலைப்பட வாய்ப்பில்லை.